**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093861

1. District மாவட்டம் : DVAC PS: காவல்நிலையம் DVAC, HQRS Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 3 Date: நாள் 19.02.19

2. (i) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7, 12.
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 28.12.18 Date to : நாள் வரை 29.12.18
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1800 hrs Time to : நேரம் வரை 0130 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.12.18 Time : நேரம் 10.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.02.19 Time : நேரம் 1700 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 19 Kms, North East.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Office of The Sub-Registrar Old No:-146, New N: 535 T.H. Road, Old Washermanpet. Royapuram.
(c) In case outside limit of this Police Station, then the Name of PS : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. Sumathi
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District Inspection Cell officer.
(g) Address : முகவரி District Inspection cell Office Chennai Collectorate Chennai - 600001.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. Venkatesan, SRO, Royapuram.
2. Tr. Sundar, Temprory Staff.
3. Tmt. Fathima @ Venmal.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
To get Concurrence from the Directorate.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

An Amount of Rs 74,330/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content is Enclosed in a Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. Judy Abigail Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Information sent to the Complainant

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer Incharge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19/02/19 at 1730 hrs.

Name: பெயர் S. Judy Abigail
Rank: நிலை Inspector of Police
Special Investigation Ce
DVAC, Chennai.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.03/2019, சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் சட்ட பிரிவு 7 மற்றும் 12 ஊ.த. (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி பின்வருமாறு.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் (S.ஜூடி அபிகேயில்) 19.02.2019-ம் தேதி 17.00 மணியளவில் பணியிலிருந்த போது கிடைக்கப் பெற்ற எனது இயக்குநரக அறிவுறுத்தலின் பேரில் 29.12.2018 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.சுமதி அவர்கள் என்னிடம் அளித்த புகாரின் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

திருமதி.சுமதி அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு :

"

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.வே.சுமதி,<br>துணை ஆட்சியர் / மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம்,<br>சென்னை-1 | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

அ/864/2018 நாள் - 29.12.2018

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-21, பழைய வண்ணாரபேட்டை, பழைய எண்.146, புதிய எண்.535, டி.எச்.ரோடு, இராயபுரம் என்ற முகவரியில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 28.12.2018 முதல் 29.12.2018 வரை - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

-----

சென்னை மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 28.12.2018-ம் தேதி மாலை முதல் 29.12.2018-ம் தேதி அதிகாலை வரை சென்னை-21, பழைய வண்ணாரபேட்டை, பழைய எண்.146, புதிய எண்.535, டி.எச்.ரோடு, இராயபுரம் என்ற முகவரியில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.74,330/- (ருபாய் எழுபத்தி நான்கு ஆயிரத்து முன்னூற்று முப்பது மட்டும்) மற்றும் கூட்டுத் தணிக்கை

**<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.03/2019, சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் சட்ட பிரிவு 7 மற்றும் 12 ஊ.த. (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி பின்வருமாறு.</u>**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் (S.ஜூடி அபிகேயில்) 19.02.2019-ம் தேதி 17.00 மணியளவில் பணியிலிருந்த போது கிடைக்கப் பெற்ற எனது இயக்குநரக அறிவுறுத்தலின் பேரில் 29.12.2018 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.சுமதி அவர்கள் என்னிடம் அளித்த புகாரின் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

திருமதி.சுமதி அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு :

"

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.வே.சுமதி,<br>துணை ஆட்சியர் / மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம்,<br>சென்னை-1 | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

அ/864/2018 நாள் - 29.12.2018

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-21, பழைய வண்ணாரபேட்டை, பழைய எண்.146, புதிய எண்.535, டி.எச்.ரோடு, இராயபுரம் என்ற முகவரியில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 28.12.2018 முதல் 29.12.2018 வரை - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

-----

சென்னை மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 28.12.2018-ம் தேதி மாலை முதல் 29.12.2018-ம் தேதி அதிகாலை வரை சென்னை-21, பழைய வண்ணாரபேட்டை, பழைய எண்.146, புதிய எண்.535, டி.எச்.ரோடு, இராயபுரம் என்ற முகவரியில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.74,330/- (ரூபாய் எழுபத்தி நான்கு ஆயிரத்து முன்னூற்று முப்பது மட்டும்) மற்றும் கூட்டுத் தணிக்கை

நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் ஆகியவைகள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது.

மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம்/- வே.சுமதி
மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர்,
சென்னை-1. "

<u>இருதுறை கூட்டுத்தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு :</u>

" சென்னை மாவட்ட ஆய்வு குழு அலுவலருடன் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு, துணைக் காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவினர் இணைந்து இன்று 28.12.2018-ம் தேதி சென்னை-21, பழைய வண்ணாரபேட்டை, பழைய எண்.146, புதிய எண்.535, டி.எச்.ரோடு, இராயபுரம், சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை.

---

| | | |
|---|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. | திருமதி.வே. சுமதி,<br>சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1. |
| | 2. | திரு.ம.குமரகுருபரன்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 3. | திரு.எஸ். வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 4. | திரு.தி.கந்தசாமி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 5. | திருமதி.சா.ஜீடி அபிகெய்ல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 6. | திருமதி.ஜோ.கிறிஸ்டி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-21, பழைய வண்ணாரபேட்டை, பழைய எண்.146, புதிய எண்.535, டி.எச்.ரோடு, இராயபுரம், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு

செய்வதற்கும் மற்றும் வில்லங்க சான்றிதழ்கள் பெறுவதற்கும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான தகவல் அடிப்படையில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சென்னை, இராயபுரம், சார் பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை கூட்டுத்தணிக்கை நடத்திட முடிவு செய்து இன்று 28.12.2018ந் தேதி மாலை சுமார் 6 மணியளவில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.வே.சுமதி மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்ணகாணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப்பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவினருடன் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இராயபுரம் சார் பதிவாளர் அலுவலகம் பழைய எண். 146, புதிய எண். 535, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21 என்ற முகவரியில் தெற்கு வடக்காக செல்லும் திருவொற்றியூர் நெடுஞ்சாலையின் மேற்கு பக்கம் கிழக்கு நோக்கி முதல் தளத்தில் அமைந்துள்ளது. மூன்று தளங்களை கொண்ட இந்த கட்டிடத்தில் சார் பதிவாளர் அலுவலகம் முதல் தளத்தில் அமைந்துள்ளது.

சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும் தற்காலிக கண்ணாடி தடுப்பு அமைக்கப்பட்ட வில்லங்க சான்று வழங்கும் அறையும், அதன் அருகில் திருமணங்களை பதிவு செய்யும் உதவியாளர் இருக்கையும் இருந்தது. அதனை தொடர்ந்து பார்வையாளர் அறையின் தெற்கு பக்கத்தில் கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய கணிணி அறை அமைந்துள்ளது. மேலும் கணிணி அறைக்கு மேற்கில் வடக்கு நோக்கி சிறிய அலுமினிய தடுப்பு கேபினில் சார் பதிவாளர் இருக்கை அமைந்துள்ளது. சார் பதிவாளர் இருக்கைக்கு அருகில் மேற்கு பக்கத்தில் ஆவண வைப்பு அறை உள்ளது.

கூட்டு தணிக்கை மேற்கொண்டபோது மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் தன்னையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்களையும் சார் பதிவாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார். மேற்படி அலுவலகத்தில் (1) திரு. ஆர்.வெங்கடேசன், சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), இராயபுரம் அவர்களும், கனினி அறையில் (2) திரு.எஸ்.வினோத் த/பெ. சேகர், கனினி தொகுப்பாளர், (3) திருமதி.அனிதா க/பெ. ரமேஷ், உதவியாளர், (4) திருமதி.மாலதி என்கிற மணிமேகலை க/பெ. ஜான்வில்சன், கேமரா ஆப்ரேட்டர் (தற்காலிக

பணியாளர்), ஆவண நகல், திருமண பதிவு, வில்லங்க சான்று மையத்தில் (5) திரு.பாலமுருகன் த்/பெ. ராஜா, உதவியாளர், (6) திரு.எ.தேவன் த்/பெ. எல்லப்பன், உதவியாளர் (7) திரு.அ.மணிகண்டன் த்/பெ. அர்சுனன், ஆவணம் நகல் எடுப்பவர், (தற்காலிக பணியாளர்), (8) திரு. எம்.இ.கர்ணன், த்/பெ ஏழுமலை, பதிவு ஆவணத்திற்கு முத்திரையிடும் உதவியாளர் ஆகியோர் பணியில் இருந்தனர். திரு.இ.சுந்தரேசன் த்/பெ. எல்லப்பன் என்ற தனிநபர் ஆவண வைப்பு அறையினுள் இருந்தார்.

சார் பதிவாளர் திரு. ஆர்.வெங்கடேசன் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். பின்னர் இந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுத்தணிக்கை ஆரம்பிக்கப்பட்டது. சார் பதிவாளர் அலுவலக நுழைவு வாயில் கதவிற்கு அருகே கையில் ஆவணங்களுடன் நின்று கொண்டிருந்த ஓர் பெண்ணை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் கேட்க, அவர் தனது பெயர் திருமதி. வெண்மால் என்கிற பாத்திமா என்றும், தான் ஆவண எழுத்தராக இருப்பதாகவும் தனது அலுவலகம் சார் பதிவாளர் அலுவலகம் உள்ள இந்த கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் உள்ளதாகவும், சார் பதிவாளரை பார்க்க வந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி நபர் தனது வலது கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரில் உள்ளதை குறித்து விசாரித்த போது திருமதி. வெண்மால் என்கிற பாத்திமா மேற்படி பிளாஸ்டிக் கவரில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்கள் தனித்தனி பண்டல்களாக மடித்த நிலையில் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.47,730/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 03 | Rs.6,000 |
| 2 | Rs.500 x 82 | Rs.41,000 |
| 3 | Rs.200 x 01 | Rs.200 |
| 4 | Rs.100 x 05 | Rs.500 |
| 5 | Rs. 10 x 03 | Rs.30 |
| | **Total** | **Rs.47,730** |

பின்னர் அந்த பணம் குறித்து திருமதி. வெண்மால் என்கிற பாத்திமாவிடம் கேட்ட போது அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளருக்கு வழங்கப்படவுள்ள லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் கணிணி அறையின் உள்ளே நுழைந்ததும் இடது பக்கத்தில் காணப்பட்ட கணிணி இரும்பு மேஜையின் பின்புறம் ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியே மடித்த நிலையில் கீழே கிடந்தது. அந்த நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 01 | Rs.500 |
| 2 | Rs.200 x 01 | Rs.200 |
| 3 | Rs.100 x 12 | Rs.1200 |
| 4 | Rs.50 x 04 | Rs.200 |
| | **Total** | **Rs.2100** |

இந்த பணம் குறித்து இரும்பு மேஜையின் எதிரில் இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.அனிதா, உதவியாளர் அவர்களிடம் கேட்டதற்கு தனக்கு இந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என கூறினார். மேலும் கணிணி அறையின் வடக்கு பக்கம் ஜெராக்ஸ் மெஷினின் மேஜைக்கு அடியில் தரையில் ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியே மடித்த நிலையில் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.2600/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 03 | Rs.1,500 |
| 2 | Rs.100 x 11 | Rs.1,100 |
| | **Total** | **Rs.2,600** |

மேற்படி பணம் குறித்து ஜெராக்ஸ் மெஷினின் மேஜைக்கு அருகே நின்றிருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் தேவன் என்றும் இவ்வலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிவதாகவும் அலுவலக பணியாக ஜெராக்ஸ் எடுக்க வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரிக்க தனக்கு அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என கூறினார்.

பின்னர் சார் பதிவாளர் இருக்கையின் வலது பக்கத்தில் உள்ள மேஜையின் பின்புறம் நின்றிருந்த் நபரை விசாரித்த போது தனது பெயர் கர்ணன் என்றும் தான் சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களை முத்திரையிடும் உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவர் மேஜையின் வலது பக்க டிராயரை சோதனை செய்த போது அதில் மடித்த நிலையில் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.850/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 01 | Rs.500 |
| 2 | Rs.100 x 03 | Rs.300 |
| 3 | Rs.10 x 5 | Rs.50 |
| | **Total** | **Rs.850** |

மேற்படி பணத்தின் எண்ணிக்கையை குறித்துக் கொண்டிருந்தபோது திடீரென மேற்படி கர்ணன் அவரது மேஜையின் மீது இருந்த பண இருப்பு பதிவேட்டை எடுத்து 28.12.2018 தேதியில் தனது பெயருக்கு நேரே ரூ.740/- என குறித்தார். அவரை எச்சரித்து மேற்படி நோட்டு புத்தகம் கைப்பற்றப்பட்டது. மேற்படி கர்ணனிடம் தொடர்ந்து மேற்படி ரூ.850/- குறித்து கேட்க, பதில் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

வில்லங்க சான்று உதவியாளர் திரு.பாலமுருகன் அவர்களிடம் இன்றைய தேதியில் வில்லங்க சான்று மற்றும் ஆவண நகல்கள் தொடர்பாக விசாரணை செய்த போது தனது மேஜையில் இருந்து ரூ.11,744/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் வில்லங்க சான்றிதழ்கள் பெறுவதற்கு ரூ.8924/-ம், ஆவண நகல்கள் வழங்குவதற்கு ரூ.2820/-ம் வசூலானதாக தெரிவித்தார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களில் உள்ள பதிவுகளுடன் ஒப்பிட்டு பார்த்தபோது அவை சரியாக இருந்தது. எனவே அந்த பணம் ரூ.11,744/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.பாலமுருகன் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது

மணிபர்சில் இருந்து ரூ.800/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு தனது சொந்தப் பணம் என்றும், அந்த விவரத்தை தான் தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு ரூ.800/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

தொடர்ந்து திருமண பதிவு சான்று உதவியாளர் திரு.தேவன் அவர்களிடம் இன்றைய தேதியில் திருமண பதிவு தொடர்பாக விசாரணை செய்த போது தனது மேஜையில் இருந்து ரூ.1,015/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் திருமண பதிவு தொடர்பாக ரூ.1,015/- வசூலானதாக தெரிவித்தார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களில் உள்ள பதிவுகளுடன் ஒப்பிட்டு பார்த்தபோது அவை சரியாக இருந்தது. எனவே அந்த பணம் ரூ.1,015/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.தேவன் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது மணிபர்சில் இருந்து ரூ.710/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு தனது சொந்தப் பணம் என்றும், அந்த விவரத்தை தான் தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் பதிவு செய்துள்ளதாகவும் செலவு போக ரூ.710/- வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு ரூ.710/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

தொடர்ந்து சார் பதிவாளர் திரு. ஆர்.வெங்கடேசன் அவர்களிடம் இன்றைய தேதியில் ஆவணங்கள் பதிவு செய்தது தொடர்பாக பெறப்பட்ட கட்டணம் குறித்து கேட்டதற்கு தனது மேஜையில் இருந்து ரூ.9,660/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் 19 ஆவணங்கள் பதிவு செய்வது தொடர்பாக கணிணி மற்றும் இதர கட்டணங்களாக ரூ.9660/- வசூலானதாக தெரிவித்தார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களில் உள்ள பதிவுகளுடன் ஒப்பிட்டு பார்த்தபோது பணம் ரூ.9,360/- மட்டுமே கணக்கில் உள்ளது. அதிகப்படியாக காணப்பட்ட ரூ.300/- குறித்து சார் பதிவாளரை விசாரித்த போது விளக்கம் எதுவும் அவர் அளிக்கவில்லை. கணக்கில் காட்டப்பட்டுள்ள பணம் ரூ.9360/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதிகப்படியாக இருந்த பணம் ரூ.300/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார் பதிவாளர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டதற்கு தனது பர்சில் இருந்து ரூ.520/-ஐ எடுத்துஆஜர் செய்தார். அதற்கான

விளக்கத்தை கேட்டதற்கு தனது அன்றாட செலவிற்கு கொண்டு வந்த சொந்தப்பணம் என்று கூறினார். இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு ரூ.520/-அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

சார் பதிவாளர் இருக்கைக்கு இடது பக்கத்தில் உள்ள ஆவண அறையின் உள்ளே நின்றிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் சுந்தரேசன் என்றும் தான் சார் பதிவாளருக்கு கள ஆய்வில் உதவியாக இருப்பதாக கூறினார். அவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப் பார்த்தபோது அதில் ரூபாய் 12,000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரங்கள் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 05 | Rs.10,000 |
| 2 | Rs.500 x 04 | Rs.2,000 |
| | **Total** | **Rs.12,000** |

இந்த பணம் குறித்து கேட்டதற்கு சார் பதிவாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இன்று 28.12.2018-ம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் ஒரு ஆவணத்தை திருப்பி கேட்டு வந்த வழக்கறிஞரிடம் ரூ.10,000/- வாங்கியதாகவும், ரூ.2,000/- பத்திர பதிவிற்கு வந்தவர்களிடம் வாங்கியதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து அவரது கைப்பையில் உள்ள ஆவணங்களை ஆய்வுக்கு தருமாறு கேட்டதற்கு தனது கருப்பு நிற கைப்பையின் ஒரு அறையில் இருந்து எடுத்து மூன்று வெள்ளை நிறத்தாள்களை ஆஜர் செய்தார். அந்த மூன்று தாள்களின் பின்னால் பென்சிலால் ஆவண விவரம் மற்றும் பணம் எழுதப்பட்டிருந்தது. அந்த விவரங்களை தானே தன் கைப்பட எழுதியதாக கூறினார். அந்த வெள்ளைத்தாள்களில் முதலாவதாக உள்ள வெள்ளைத்தாளின் ஒரு பக்கத்தில் தமிழ்நாடு அரசு பதிவுத்துறை, சொத்து தொடர்பான வில்லங்க சான்று என்று தலைப்பிட்டு விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்புறத்தில் பென்சிலால் எழுதப்பட்ட விவரங்கள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டதற்கு 74, 75, 3376, 77, 78, 79, 80 ஆகியவை இராயபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2018-ல் பதிவு செய்யப்பட்ட 3374, 3375, 3376, 3377, 3378, 3379, 3380 ஆகிய ஆவண எண்களை குறிக்கும் எனவும் அவற்றிற்கு எதிரே

எழுதப்பட்ட தொகை அந்த ஆவணங்களுக்கு சார்பதிவாளருக்காக தான் வாங்கிய பணம் என்றும் தெரிவித்தார். மேலும் அந்த தாளில் குறிப்பிட்டுள்ள AST என்பது இவ்வலுவலகத்தில் பணியாற்றும் Assistant தேவன் என்றும், J என்பது இவ்வலுவலகத்தில் Junior Assistant பொறுப்பை கவனிக்கும் பாலமுருகன் என்றும், பாத்திமா என்பது இவ்வலுவலகத்திற்கு அடிக்கடி வரும் ஆவண எழுத்தர் வெண்மால் என்கிற பாத்திமா என்றும், ADJ என்பது Adjudication Document என்றும், 3896 என்பது இவ்வலுவலக ஆவண எண்ணையும் (2018-ல் பதிவு செய்யப்பட்டது), 97 என்பது இவ்வலுவலக ஆவண எண். 3897/2018-ஐயும், பலே என்று குறிப்பிட்டுள்ளது அட்வகேட் திரு.பாலகிருஷ்ணன் அவர்களையும், சதிஷ் என்பது இவ்வலுவலகத்திற்கு டீ, காபி வாங்கி கொடுப்பவர் என்றும், புரவி என்பது Provision என்றும் AS என்பது Office Expense-ஐ குறிப்பதற்கு எழுதப்பட்டதாகும். ஆவண எண்களுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தொகை அந்த ஆவணங்களின் பதிவிற்காக பெற்ற லஞ்ச பணம் எனவும், அலுவலர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகை அந்த அலுவலர்களுக்கு கொடுக்கப்பட்ட லஞ்சப் பணம் எனவும், சதிஷ், புரவி, AS என்ற எழுத்துக்களுக்கு எதிரே எழுதப்பட்டுள்ள தொகை செலவு செய்யப்பட்ட தொகை என்றும் கூறினார்.

இதே போன்று இரண்டாவது வெள்ளை நிறத் தாளின் ஒரு புறத்தில் ரூ.100 தொகைக்கான India Non Judicial என்ற முத்திரையிடப்பட்டுள்ளது (22658/20.11.2018). அந்த தாளின் பின்புறத்தில் பென்சிலால் எழுதப்பட்ட விவரங்கள் குறித்து கேட்டதற்கு மோகன் களம் என்பது அட்வகேட் மோகன் அவர்களிடம் கள ஆய்விற்காக வாங்கிய லஞ்சப் பணத்தையும், காவேரி களம் என்பது இவ்வலுவலக ஆவண எழுத்தர் காவேரி அவர்களிடம் கள ஆய்விற்காக வாங்கிய தொகையை குறிப்பதற்கும், 4118 கோர்ட் என்பது நீதிமன்ற அலுவலுக்காக வந்த பணியாளரிடம் கொடுத்ததாகவும் கூறினார். மேலும் அந்த காகிதத்தின் பின்பக்கத்தில் வலது பக்கத்தில் பென்சிலால் குறிக்கப்பட்டுள்ள 80 முதல் 99 வரை குறிப்பிட்டுள்ள எண்கள் இவ்வலுவலக ஆவண எண்கள் 4280/2018 முதல் 4299/2018 வரை உள்ள ஆவணங்களை குறிக்கும் என்றும், மேற்படி ஆவண எண்களுக்கு எதிரே எழுதப்பட்டுள்ள அசோகன், சாரு, பாலு, பாத்திமா, வீர, பாலு, சித்ரா ஆகிய பெயர்கள் முறையே இந்த சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அடிக்கடி வந்து

செல்லும் வழக்கறிஞர் திரு.அசோகன், வழக்கறிஞர் திருமதி.சாருலதா, வழக்கறிஞர் திரு.பாலகிருஷ்ணன், ஆவண எழுத்தர் திருமதி.வெண்மால் என்கிற பாத்திமா, வழக்கறிஞர் திரு.வீரமுருகன், ஆவண எழுத்தர் திருமதி.சித்ரா ஆகியோரை குறிப்பிடுவதாகவும் மேற்படி ஆவணங்களுக்கு எதிரே எழுதப்பட்டுள்ள தொகைகள் அவற்றில் குறிப்பிட்டுள்ள நபர்களிடம் லஞ்சமாக வாங்கியது என்றும் P என்பது Power of Attorney என்றும், ராமலிங்கம் என்பது வழக்கறிஞர் திரு.ராமலிங்கம் என்றும், கணேசன் என்பது வழக்கறிஞர் திரு. கணேசன் என்றும் குறிப்பிட்டார். மேற்படி நபர்களுக்கு எதிரே எழுதப்பட்ட தொகை அவர்களிடம் லஞ்சமாக வாங்கியதாக தெரிவித்தார்.

மூன்றாவதாக உள்ள வெள்ளை நிற தாளின் ஒரு புறத்தில் ரூ.5000 தொகைக்கான India Non Judicial என்ற முத்திரையிடப்பட்டுள்ளது (48131/19.9.2018). அந்த வெள்ளை நிற தாளின் பின்புறத்தில் இடது புறத்தில் எழுதப்பட்டுள்ள காமாட்சி என்பது வழக்கறிஞர் திருமதி.காமாட்சி என்றும், சச்சி என்பது ஓய்வு பெற்ற சார்பதிவாளர் திரு.சச்சிதானந்தம் என்றும், சம்பளம் என்பது பணி நீக்கத்தில் உள்ள மேற்படி சச்சிதானந்தத்திற்கு மாதா மாதம் வழங்கப்படும் தொகை என்றும், AST என்பது Assistant தேவன் என்றும், பைண்டர் என்பது அலுவலக ஆவணம் தைப்பவர் என்றும் டிபன் என்பது அன்று சாப்பிட்ட காலை டிபனையும் குறிக்கும். மேற்படி பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகைகள் அந்தந்த நபர்களுக்கு கொடுக்கப்பட்ட பணம் என்றும், ஆவண எண்களுக்கு எதிரே எழுதப்பட்ட தொகை அந்தந்த நபர்களிடம் சார் பதிவாளருக்காக நான் வசூல் செய்த தொகை என்றும் கூறினார். அதில் நான் டிபனுக்காக ரூ.500 செலவு செய்தேன் என்றும் கூறினார். மேற்படி தாளின் வலது புறத்தில் எழுதப்பட்டுள்ள எண்கள் 14 முதல் 30 வரை, 207, 208, 3674 ஆகியவை தனது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்கள். 4314/ 2018 முதல் 4330/2018 வரை ஆகும். 3674 என்பது ஆவண எண்.3674/2018-ஐ குறிக்கும் என்றும், 207 மற்றும் 208 என்பது இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்கள் 4207/2018 மற்றும் 4208/2018 ஆகும். மேற்படி ஆவண எண்களுக்கு எதிரே எழுதப்பட்டுள்ள கோபு என்பது வழக்கறிஞர் திரு.கோபு என்பதும், பலே என்பது வழக்கறிஞர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களையும், சிம்மா என்பது வழக்கறிஞர் திரு.நரசிம்மன் அவர்களையும், மரேஜ் என்பது

திருமண பதிவையும், மதி என்பது வழக்கறிஞர் திரு.மதிவாணன் அவர்களையும், பாத்திமா என்பது ஆவண எழுத்தர் திருமதி. வெண்மால் என்கிற பாத்திமா அவர்களையும், களம் என்பது களப்பணியையும், சுயம்பு என்பது ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் திரு.சுயம்பு என்கிற சுயம்புலிங்கத்தையும் குறிக்கும் எனவும் மேற்படி ஆவண எண்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகை அதற்கு அருகில் குறிப்பிட்டுள்ள நபர்களிடம் பத்திர பதிவிற்கு லஞ்சமாக வாங்கிய பணம் என்று கூறினார். இந்த மூன்று வெள்ளை தாள்களில் உள்ள எழுத்துக்கள் பென்சிலால் தன்னால் எழுதப்பட்டது என்று சுந்தரேசன் தெரிவித்தார். மேற்படி மூன்று வெள்ளை நிற தாள்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் மேற்படி திரு.சுந்தரேசன் சார் பதிவாளர் திரு.ஆர்.வெங்கடேசன் அவர்களுக்கு பணம் வாங்கி கொடுக்கும் ஏஜென்டாக செயல்படுவது தெரிகிறது. எனவே மேற்படி திரு.சுந்தரேசனிடம் உள்ள பணம் ரூ.12,000/- லஞ்ச பணம் என்ற ஐயத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

சார் பதிவாளர் அலுவலக ஆவண அறையில் சோதனை செய்த போது மேற்படி அறையின் மைய தூண் அருகில் இருந்த மர மேஜையின் அடியில் ரூபாய் நோட்டுக்கள் மடித்த நிலையில் தரையில் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.9050/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 01 | Rs.2,000 |
| 2 | Rs.500 x 09 | Rs.4,500 |
| 3 | Rs.100 x 21 | Rs.2,100 |
| 4 | Rs.50 x 06 | Rs.300 |
| 5 | Rs.20 x 04 | Rs.80 |
| 6 | Rs.10 x 07 | Rs.70 |
| | **Total** | **Rs.9,050** |

மேற்படி பணம் குறித்து சார் பதிவாளரிடமும் அந்த அறையில் இருந்த தனி நபர் திரு.சுந்தரேசன் அவர்களிடமும் கேட்ட போது தங்களுக்கு அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என கூறினார். மேற்படி பணம் ரூ.9,050/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இந்த இருதுறை கூட்டுத் தணிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வரண்டாவில் இருந்து உள்ளே வந்த பின்னால் பெயர் விவரம் கேட்டு தெரிந்து கொண்ட சென்னை-93, சாலிகிராமம், முத்தமிழ் நகர், சண்முக சுந்தரம் தெரு, கதவு எண்.36, ஜெயக்கொடி என்பவர் மகன் திரு.ஜெ.தினேஷ் என்பவர் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் முன்பு தானாக முன்வந்து எவ்வித தூண்டுதலோ துன்புறுத்தலோ இன்றி ஓர்எழுத்து பூர்வமான வாக்குமூலத்தை அளித்தார். அந்த வாக்குமூலத்தில் சார் பதிவாளர் திரு.ஆர்.வெங்கடேசன் இவ்வலுவலக ஆவண எண். 3862/2018-ல் குறிப்பிட்டுள்ள இடத்தை கள ஆய்வு செய்து ஆவணத்தை உரியவரிடம் திருப்பி அளிக்க ரூ.10,000/- லஞ்சம் கேட்டு தனது ஏஜென்ட் மேற்படி திரு.சுந்தரேசன் என்பவர் மூலம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார். இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை சோதனையின் முடிவில் மேற்கூறியவாறு கணக்கில் வராத மொத்த பணம் ரூ.74,330/- மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்பு பதிவேட்டை (தொகுதி எண்.13) ஆய்வு செய்ததில் இன்றைய தேதி 28.12.2018-ல் சார் பதிவாளர் தன்னிடம் உள்ள ரொக்கம் எதையும் குறிப்பிடவில்லை. இந்த ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இருதுறை கூட்டு தணிக்கையின்போது உடமைக்களுக்கோ ஆவணங்களுக்கோ எந்த சேதமும் ஏற்படவில்லை. சார் பதிவாளர் அலுவலக அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு செய்யப்படவில்லை. சோதனையின் போது பெண் காவல் ஆய்வாளர் மற்றும் பெண் காவலர்கள் பணியில் இருந்தனர். இந்த சோதனை 28.12.2018-ம் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கி 29.12.2018-ம் தேதி அதிகாலை 1.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/-திருமதி.வே.சுமதி,
சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு
அலுவலர், சென்னை மாவட்டம்,
சென்னை-1.

ஒப்பம்/- திரு.ம.குமரகுருபரன்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.எஸ்.வள்ளிநாயகம்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.தி.கந்தசாமி,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.சா.ஜீடி அபிகேய்ல்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.ஜோ.கிறிஸ்டி,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.ஆர்.வெங்கடேசன்,
சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை)
சார் பதிவாளர் அலுவலகம்,
இராயபுரம், சென்னை.

19/02/19
Insp/SIC/DVAC.

**INSPECTOR OF POLICE,**
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.